கள் துணை மதிப்பீடு நிதி நிலை அறிக்கை வருகிறபோது தெளிவாக வரும். அப்போது விரிவாக எடுத்துச்சொல்வதற்கு வாய்ப்பு இருப்பதன் காரணமாக அவற்றைப்பற்றி இப்போது நான் சொல்லவிரும்பவில்லை. அதற்கான பதில் சொல்லும்போது விரிவாக எடுத்துச்சொல்லலாம் என்று சொல்லி, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி ''தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு எதிர்பாராச் செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவை முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, ''நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்'' ''தமிழ்நாடு 1982–ஆம் ஆண்டு எதிர்பாரா செலவு நிதி (மூன்றாவது திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 35/1982) நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

4. அறிவிப்பு

அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்குமுறை) திருத்த சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்கு முறை) மற்றும் தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) திருத்த சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 36/1982) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்,